<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**HMOP.No.295/2021**

பெயர் : சித்ரா (PW1)

த/பெ. :

தேதி : 14.07.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

மனுதாரர் எனது கணவர். எனக்கும் மனுதாரருக்கும் எனக்கும் 23.08.2018 ஆம் தேதி அன்று இந்து சாஸ்திர முறைப்படி மணல்மேடு MAK திருமண மண்டபத்தில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். எனது கணவருக்கு காது கேட்பத்தில் குறைபாடும் மற்றும் வாய் பேசமுடியாதவர் என்றால் சரிதான். நான் அது தெரிந்துதான் திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். நான் இந்து பெண் என்ற முறையில் அவருக்கு ஆற்றவேண்டிய கடமைகளை செய்யவில்லை என்றும்,தொடர்ந்து அவரை செவுட்டு பயல், ஊமைப்பயல் என்று அவருடைய குறைபாடுகளை சுட்டிக்காட்டி மனரீதியிலான துன்பம் கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் அவரது வீட்டு மாடியில் தனியாக குடித்தனம் உள்ளேன் என்றால் சரிதான். கீழ் வீட்டில் மனுதாரரின் அம்மா, அப்பா மற்றும் மனுதாரரும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த வீடு மனுதாரரின் சகோதரருக்கு சொந்தமான வீடு என்றால் சரியல்ல.

எனது மாமனார் மண்பாண்டம் செய்து தொழில் செய்பவர் என்றால் சரிதான். மாடியில் இருந்து கொண்டு நான் கீழே எனது மாமனார் செய்து வரும் மண்பாண்டங்களை உடைத்து தள்ளுவது எனது மாமியாரை அடிப்பது மற்றும் எனது கணவரை துன்புறுத்துவது போன்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி HMOP No.253/2019 வழக்கு தாக்கல் செய்தார் என்றால்சரிதான். அதன் பின்னர் நான் ஒழுங்காக வாழ்க்கை நடத்துகிறேன் என்று உறுதி அளித்ததன் பேரில் மனு வாபஸ் பெறப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கு வாபஸ் பெற்றது 2021 ஆம் ஆண்டு ஆகும். இந்த வழக்கினை தாக்கல் செய்தது 2021 என்றால் சரிதான். தொடர்ந்து 6 ஆண்டு காலமாக நான் பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். கடந்த 6 ஆண்டுகளாக நான் எத்தனை முறை என் கணவர் குடும்பத்தார் மீது மணல்மேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும்,. என் மீது என் கணவர் மற்றும் அவரது குடும்பத்தால் எத்தனை முறை மணல்மேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றும், எத்தனை தடவை எங்களுக்குள் அடிதடி நடந்தது என்றால் பல முறை அடிதடி நடந்தது. அவர்கள் தான் என்னை அடித்தார்கள். அந்த கிரிமினல் வழக்குகள் அடிப்படையில் நானும் என் கணவரும் தற்போது முன்ஜாமீனில் தான் உள்ளோம் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் எனது கணவர் முன்ஜாமீன் பெற்றுள்ளார்.

என் கணவர் கொடுத்த புகாரில் நான் முன்ஜாமீன் பெற்றுள்ளேன். என்னையும் எனது கணவரையும் பார்த்தாலே மணல் மேடு காவல் நிலையத்திற்கு அதிர்ச்சியாக இருக்கும் என்றால் சரிதான். இருதரப்பும் பல தடவைகள் காவல் துறையின் அவரச அழைப்பான 100ஐ அழைத்திருக்கிறோம் என்றால் சரிதான்.

அடிக்கடி இருதரப்பினரின் புகாரினை எடுத்து மணல்மேடு காவல் நிலையத்தால் வீட்டிற்கு வந்து விசாரணை செய்வது வழக்கம் என்றால் சரிதான். எனது மாமனாருக்கு 75 வயது இருக்கும் என்றால் சரிதான். எனது மாமியாருக்கு 70 வயது இருக்கும் என்றால் சரிதான். இருவரையும் நான் பலமுறை கடுமையாக தாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எத்தனை முறை எனது மாமியார், மாமனார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எத்தனை தடவை எனது கணவரை நெஞ்சில் மிதித்து இருக்கிறேன், ஒரு 40, 50 முறை இருக்குமா என்றால் அவ்வளவு முறை இருக்காது. தொடர்ந்து நான் மனுதாரரையும் அவரது குடும்பத்தாரையும் மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் துன்பம் விளைவித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தெருக்காரர்களையும், மணல்மேடு போலீசாரையும் விசாரித்தால் உண்மை நிலை தெரியும் என்றால் விசாரித்து பார்க்கலாம், வீட்டில் குடிநீர் பைப் உள்ளதா என்றால் உள்ளது. நான் அதனை உடைத்துவிட்டு தண்ணீர் கொடுக்கச்சொல்லி குற்றவியல் நீதிமன்றத்தில் புகார் அளிப்பது மற்றும் பல்புகளை நானே உடைத்துவிட்டு மனுதாரர் உடைத்ததாக நீதிமன்றத்திலும். காவல் துறையிலும் முறையிடுவதே எனக்கு வழக்கம் என்றால் சரியல்ல.

எத்தனை முறை சிசிடிவி கேமராவை உடைத்துள்ளேன் என்றால் சிசிடிவி கேமரா இருக்கும் இடமே எனக்கு தெரியாது. நீங்கள் தற்போது கூறுவதை வைத்துதான் சிசிடிவி கேமரா உள்ளது தெரியும். அந்த சிசிடிவி கேமராவின் பதிவை எடுத்து பார்த்தால் உண்மை நிலவரம் தெரியும் என்றால் அதில் நான் தான் தெரிவேன். எனக்காத்தான் சிசிடிவி கேமரா வைத்துள்ளார்கள். நானும் எனது கனவரும் சேர்ந்து வாழமுடியாத சூழ்நிலை உள்ளது என்றால் எனக்கு வாழவிருப்பம் ஆனால் அவர்களுக்கு என்ன விருப்பம் என்று தெரியவில்லை. மனுதாரர் என்ன மனு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் என்ன குறை சொல்லியுள்ளார்கள் என்ற விபரம் தெரிந்துதான் நான் அதற்கு பதில் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் கூறியுள்ள குறைகளை திருத்திக்கொண்டு மீண்டும் வாழ்வதற்காக எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளேன் பலமுறை அவர்கள் காலில் சென்று விழுந்துள்ளேன். நான் அவர்கள் மூன்றுபேர் காலிலும் விழுந்தேன். நான் அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அவர்கள் மூவரையும் நான் கடுமையாக தாக்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

சேர்ந்து வாழவேண்டும் என்று நான் சொல்லும் நிலையில், சேர்ந்து வாழ்வதற்காக நீதிமன்றத்தின் மூலமோ, காவல் துறையின் மூலமோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மணல்மேடு காவல் நிலையத்தில் நான் என்ன புகார் கொடுத்தேன் என்றால் என்னையும் எனது அம்மாவையும்

அடித்ததாக புகார் கொடுத்தேன். என்னையோ, எனது தாயாரையோ மனுதாரரோ அவரது குடும்பத்தாரோ எந்த காலத்திலும் தாக்கவில்லை என்றாலும், அவ்வாறு நான் தாக்கப்பட்டாக பொய்புகார் கொடுத்த காரணத்தினால் தான் நாங்கள் சேர்ந்து வாழ இயலாத சூழ்நிலை உள்ளது என்றால் சரியல்ல. எனது எதிருரையில் மனுதாரர்மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறியுள்ளதற்கு ஆதாரங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. அவை அனைத்தும் வழக்கிற்காக சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் என்று சொன்னால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.